# Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX: 94-11-269-8629
E-mail: cultujpn@co.mofa.go.jp /www.lk.emb-japan.go.jp


**PRESS RELEASE**

ஊடக வெளியீடு செப்டெம்பர் 29, 2011

## ஜப்பான் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புணரமைக்க ரூ.9.3 பில்லியன் வழங்குகிறது

ஜப்பானிய அரசாங்கம் “அவசர இயற்கை அணர்த்த புணரமைப்பு செயற்திட்டத்திற்கு” 7 பில்லியன் ஜப்பானிய யென்னை (அண்ணளவாக ரூ.9.3 பில்லியன்) நீண்டகாலக்கடன் நிதியாக வழங்கியது. இச்செயற்த்திட்டத்திற்கான நிதியானது இலங்கையின் மத்திய, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை புணரமைக்க பயன்படுத்தப்படும்.

இவ்வருட ஆரம்பத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெய்த மழை காரணமாக பெருவெள்ளம் ஏற்பட்டதுடன் வீதிகள், நீர்ப்பாசன ஒழுங்கு முறைகள் போன்ற அடிப்படை கீழ்க்கட்டமைப்பு வசதிகளும் மக்களின் ஜீவனோபாயங்களும் மோசமாக பாதிப்படைந்திருந்தன. பாதிப்படைந்தள்ள கீழ்க்கட்டமைப்பு வசதிகளின் புணரமைப்பானது இப்பிரதேசங்களிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களின் சமூக பொருளாதார சேவைகளினதும் ஜீவனோபாயங்களினதும் சீரான இயக்கத்திற்கான முதற்தேவையாகும். அண்மையில் ஏற்பட்ட உள்நாட்டு பாரிய இயற்கை அணர்த்தமான கிழக்கு ஜப்பான் நில அதிர்வினால் பாதிக்கப்பட்ட போதும் ஜப்பானிய அரசாங்கமானது சர்வதேச சமூகத்துக்கு தகுந்த செயற்திறன் கொண்ட மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து வழங்கும்.

“கிழக்கு ஜப்பான் பாரிய நில அதிர்வின் பின்னர் இலங்கை அரசாங்கமும் மக்களும் வழங்கிய உதவிகளை நான் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். இயற்கை அணர்த்தங்கள் எவ்வாறு மக்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையம் இப்பாதிக்கப்பட்ட பிரதேசங்களை முன்னுரிமை வழங்கி மீளக்கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் ஜப்பான் புரிந்திறுக்கிறது. இலங்கை மக்களுக்காக ஜப்பானால் வழங்கப்பட்ட இந்நிதியானது மிகவும் திறனாக பயன்படுத்தப்படுவதுடன, இக்கீழ்க்கட்டமைப்பு வசதிகளை நீண்ட காலத்தில் பராமரிக்க உரிய துறை ரீதியிலான அதிகாரங்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதை நாம் எதிர்பார்க்கிறோம்,” என்று ஜப்பானிய தூதுவர் கௌரவ. திரு. குனியோ தகஹசி கூறினார்.

இச்செயற்திட்டம் தொடர்பான குறிப்புக்கள் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் குனியோ தகஹசி மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் Dr. P.B. ஜயசுந்தர ஆகியோருக்கிடையே நிதி திட்டமிடல் அமைச்சில் இன்று (29-09-2011) கைமாற்றிக்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கடன் தொடர்பான ஒப்பந்தமானது JICA நிறுவனத்தின் இலங்கைக்கான தலைமைப்பிரதிநிதி Mr. அகிரா சிமுரா மற்றும் Dr. P.B. ஜயசுந்தர ஆகியோருக்கிடையே கைச்சாத்திடப்பட்டது.

*******************************************************************************

Please contact the Economic Cooperation Section of the Embassy for further information, Tel: 011-269-3831 (Ext.224)